## கல்வி நிறுவன தீக்கிரைச் சம்பவம் விசாரணைக்காக சிலர் கைது

யாழ் நகரிலுள்ள தனியார் கல்வி நிறுவனம் நேற்று முன்தினமிரவு தீக்கிரையாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் சிலர் விசாரணைக்காக கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை நேற்று பெருந்திரளான மாணவர்கள் தீக்கிரையாக்கப்பட்ட தனியார் கல்வி நிறுவனத்தை சென்று பார்வையிட்டனர். இதற்கிடையில் சில பாடங்களுக்கான வகுப்புக்கள் நேற்று இடையூறு இன்றி அங்கு நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. (70)

## தமிழ் இளைஞர் யுவதிகள் கொழும்பில் போதைப் பொருளுக்கு அடிமையாகின்றனர்

கொழும்பில் போதைப் பொருளுக்கு அடிமையாகும் இளவயதினரில் தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் அதிகரித்து வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. குறிப்பாக ஹோஸ்டல்களிலும், விடுதிகளிலும் தங்கியிருக்கும் இவர்களுக்கு இப்பழக்கத்தை சிலர் ஏற்படுத்துவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. போதை மயக்கத்தில் இவர்கள் தமக்குள் சண்டைபிடிப்பதைக் காணமுடிவதாகவும் குறிப்பாக சில தமிழ் யுவதிகள் தலைமயிரில் பிடித்து அடிபட்டதாகவும் — 04 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 4 - 50

# முரசொலி

முரசு 05 ஒலி 145 பிரசோற்பத்தி சித்திரை 09 ( 22-04-1991 ) திங்கள்

## முள்ளிவாய்க்கால் இறங்குதுறையில் இழுவைப்படகில் உணவுப் பொருள்கள்

முல்லைத்திவு - முள்ளிவாய்க்கால் இறங்குதுறையில் குமணக்கப்பலில் இருந்து இழுவைப்படகில் இறக்கப்பட்ட பெருமளவு உணவுப்பொருள்கள் இன்னமும் கரையில் இறக்க முடியாத நிலையில் பல நாள்களாக இருந்துவருகின்றன. ஊரடங்குச் சட்டம் திடீரென அமுல் செய்யப்பட்டதால் உணவுப் பொருள்களை இழுவைப்படகுடன் அப்படியே கைவிடவேண்டிய நிலை ஏற்பட்டது. இவற்றை இறக்க கட்டுப்பபடை தலைமையகம் அனுமதி வழங்கவில்லை எனவும், செஞ்சிலுவைச்சங்கம் இது தொடர்பாக நடவடிக்கை எடுத்துவருவதாகவும் முல்லைத்திவு செயலக வட்டாரங்கள் தெரிவித்தன முள்ளிவாய்க்கால் இறங்குதுறைக்கு அண்மையில் முல்லைத்திவு இராணுவ முகாம் இருப்பதால் இவற்றை இறக்க முடியவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. 38

# இந்தியத்தூதரக தமிழ் ஊழியர் மீது பொலிஸார் கடும் தாக்குதல்!

### இந்தியா இலங்கை அரசுடன் தொடர்பு

கொழும்பில உள்ள இந்திய தூதரக ஊழியர் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு மோசமாகத் தாக்கப்பட்டுள்ளார். அண்மைக்காலங்களில் பொலிஸாரின் அத்துமீறல்களுக்கு உள்ளான மூன்றாவது இந்தியப்பிரஜை இவராவர்.

இந்திய தூதரக ஊழியரான தமிழ் நாட்டைச் சேர்ந்த வி. இராஜேந்திரன் அன்று மாலை வீதியால் சென்று கொண்டிருந்த போது பொலிஸார் இவரைக் கைது செய்தனர். தாம் தூதரக ஊழியர் என்று கூறி அடையாள அட்டையைக்காட்டியும் இவரை பொலிஸார் விடவில்லையாம்.

கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்திற்கு இவரைக் கொண்டுசென்ற பொலிஸார் அங்கு வைத்து இவரை கடுமையாக தாக்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக இந்திய தூதரகம் இலங்கை பாதுகாப்பு அமைச்சுடனும் வெளியுறவு அமைச்சுடனும் நேற்று தொடர்பு கொண்டது. இந்திய அரசின் எழுத்து மூலம் கண்டனம் இன்று இலங்கை அரசிடம் வழங்கப்படவுள்ளதாக இந்திய தூதரகம் தெரி — 4 ஆம் பக்கம் பார்க்க

## தமிழில் இல்லை

பேராதனைப் பல்கலைக் கழக வெளிவாரிப் பட்டப் பரீட்சைகளுக்கான சுயவிவரக் கோவை சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மட்டுமே அச்சிடப்பட்டுள்ளது. (48)

## காந்தன் வீரமரணம்

கடந்த மாதம் 21 ஆந் திகதி சிலாவத்துறை இராணுவமுகாம் தாக்குதலின் போது புலிகள் தரப்பில் காந்தன் (அருள்மொழி - சதிஷ்குமார், பாசையூர்) வீரமரணமடைந்தார் இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர். (71)

## மடு அகதி முகாமுக்கு நேற்றும் லொறிகளில் உணவு

மடு அகதி முகாமுக்கு நேற்றும் பத்து லொறிகளில் அத்தியாவசியப் பொருள்கள் கொழும்பில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டன.

நேற்றும் சுமார் நூற்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் வவுனியா, மன்னாரப் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து காட்டுப் பாதைகளுடாக மடுக்கோவிலுக்குச் சென்ற — 4 ஆம் பக்கம் பார்க்க

## கிழக்குப்பகுதி, மன்னார்ப்பகுதிக்கு விமானம் மூலம் வினாத்தாள்கள்

வடக்குக் கிழக்கில் நடைபெறவுள்ள கல்விப் பொதுத் தராதர (உயர்தர) விசேட பரீட்சைகளுக்கான வினாத் தாள்கள் வடபகுதியில் மன்னார் தவிர்ந்தமற்றைய இடங்களுக்கு தரைமார்க்கமாகவே எடுத்து வரப்பட்டதாக பரீட்சைத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

வடபகுதியின் மன்னார் — 4 ஆம் பக்கம் பார்க்க

## முல்லை இ. போ. ச. ஊழியருக்கு ஐந்து மாத சம்பளம் இல்லை

முல்லைத்திவு இலங்கை போக்குவரத்துச் சாலை ஊழியர்களுக்கு கடந்த ஐந்து மாதங்களாக சம்பளம் வழங்கப்படாததால் ஊழியர்களின் குடும்பம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இச்சாலையின் நூற்றுக்கு மேற்பட்ட ஊழியர்களுக்கு டிசம்பர் மாதம் முதல் இற்றைவரை சம்பளம் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (38)

## பரப்புகடந்தான் மோதலையடுத்து படையினர் மாந்தை திரும்பினர்

நேற்று முன்தினம் மன்னார் மாவட்டம் பரப்புக்கடந்தான் பகுதியில் இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலை நடாத்தியதைத் தொடர்ந்து படையினர் நேற்று முன்தினம் காலை பரப்புக்கடந்தான், ஆண்டான்குளம், ஆட்காட்டி வெளிப் பகுதிகளில் இருந்து மாந்தைப் பகுதிக்கு திரும்பிச் சென்றுவிட்டனர்.

இராணுவத்தினர் திரும்பிச் சென்றுவிட்ட இப்பகுதிகளுக்கு விடுதலைப் புலிகள் சென்று பார்த்த போது அங்கு படையினர் விட்டுச் சென்ற பல பொருள்கள் காணப்பட்டன.

ஜி. பி. எம். ஜி. மேலதிக — 4 ஆம் பக்கம் பார்க்க

## நவம்பரில் சார்க் மாநாடு

எதிர்வரும் சார்க் மாநாடு

## திட்டமிட்டபடி உயர்தர பரீட்சை

## வவுனியாவில் பொதுமக்கள் மீது புளொட் சூடு: ஒருவர் பலி 11பேர் காயம்

மாதங்களாக சம்பளம் வழங் கப்படாததால் ஊழியர்களின் குடும்பம் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளது. றையரை சம்பளம் வழங்கப் பட வில்லை எனத் தெரிவிக் கப்படுகிறது. (38)

## திட்டமிட்டபடி உயர்தர பரீட்சை நடாத்த ஒத்துழைப்பு வேண்டுகிறார்

நாளை திட்டமிட்ட படி கல்விப் பொதுத் தராதர (உயர்தர) விசேட பரீட்சை வடக்குக் கிழக்கில் நடை பெறும் என பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள் ளது.

நாளை நடைபெறவுள்ள இப் பரீட்சைகள் சுமுகமாக நடை பெறுவதற்கு அனைத் துத் தரப்பினரது ஒத்துழைப்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## யாழ் நகரில் பரீட்சையை நடாத்துமாறு கோரிக்கை

இலங்கை கல்வி நிர்வாக சேவை வகுப்பு மூன்றுக்கான போட்டிப் பரீட்சையை யாழ்ப்பாணத்திலும் நடாத் துமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் மகஜர் ஒன் றின் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சுமார் ஆயிரம் அதிபர்கள், ஆசிரியர்கள் கையொப்பமிட் டுள்ள இந்த மகஜரின் பிரதி

— 4 ஆம் பக்கம் பார்க்க

## இணக்கமன்று உறுப்பினர் மீது இரவு நேரம் தாக்குதல்

நாகர் கோவில் இணக்க மன்று உறுப்பினர் ஒருவர் மீது இரவு நேரம் தாக்குதல் நடாத்தப்பட்டதாக புகார் செய்யப்பட்டுள்ளது,

கடந்த 18 ஆம் திகதி இரவு இவர் உறவினரின் வீட்டி லிருந்து தனது வீட்டுக்கு வந்துகொண்டிருந்த போது பதுங்கியிருந்த நபர் ஒருவர் பொல்லால் தாக்கியதாகத்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## நவம்பரில் சார்க் மாநாடு

எதிர்வரும் சார்க் மாநாடு நவம்பர் மாதம் கொழும்பில் நடைபெறவுள்ளது.

இந்தியாவில் புதிய அரசு தெரிவான பின்னரே மாநாடு நடாத்தப்படும் திகதி அறி விக்கப்படும் என வெளியுறவு அமைச்சர் ஹரல்ட் ஹேரத் தெரிவித்துள்ளார்.

# வவுனியாவில் பொதுமக்கள் மீது புளொட் சூடு; மூவர் பலி 11பேர் காயம்

நேற்று முன்தினம் வவு னியா காமினி மகா வித்தி யாலயத்திற்கும் தாண்டிக்குளத் திற்கும் இடையில் நின்ற பொதுமக்கள் மீது புளொட் குழுவினர் துப்பாக்கிச் சூடு நடாத்தியதில் 3 பொது மக் கள் பலியாகினர்! 11பேர் காயமடைந்தனர்.

கொல்லப்பட்ட பொது மக் கள் சடலத்தையும் காய மடைந்த ஆறு பேரையும் மதகுரு ஒருவர் எடுத்துச் சென்றுள்ளார். காயமடைந்த மிகுதி ஐந்து பேரும் வீடு த

— 4 ஆம் பக்கம் பார்க்க

## காரைநகர் அகதிகளுக்கு செஞ்சிலுவை நிவாரணம்

காரைநகரில் இருந்து இடம் பெயர்ந்த சுமார் இரண்டா யிரம் குடும்பங்களுக்கு யாழ் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் நிவாரணங்களை வழங்கிவருகிறது.

நேற்று முன் தினம் 600 குடும்பங்களுக்கும், நேற்று 1500 குடும்பங்களுக்கும், நிவா ரணம் வழங்கப்பட்டது.

இவர்களின் விவரங்கள் சேக

— 4 ஆம் பக்கம் பார்க்க

## முல்லை மாவட்டத்தில் அன்னை பூபதிக்கு அஞ்சலி

அன்னை பூபதியின் மூன் றாம் ஆண்டு நினைவை யொட்டி முல்லைத்தீவு மாவட்டம் பூராவும் உணர்வு பூர்வமான அஞ்சலிகள் செலுத் தப்பட்டன.

இம் மாவட்டத்தில் தணுக் காய், யோகபுரம், புதுக்குடி யிருப்பு ஒட்டுசுட்டான், மாங் குளம் போன்ற பகுதிகளில் கறுப்பு, மஞ்சல் நிறக் கொடி களும் பந்தல்களும் அமைக்கப் பட்டு, தோரணங்களும் வாழைகளும் கட்டப்பட்டு நினைவு தினம் கொண்டாடப் பட்டது. (38)

## மாவிலங்கேணி பகுதியில் புலிகள்-இராணுவம் மோதல்

மன்னார் மாவட்டம் மாவி லங்கேணியில் நின்ற இரா ணுவத்தினர் நேற்று முன் தினம் மாலை செம்மண்தீவை நோக்கி முன்னேறினர்.

இவர்களை மாவிலங்கேணி யில் இருந்து 500 யார் தூரத்தில் வழிமறித்து விடு தலைப்புலிகள் தாக்கினர்.

— 4 ஆம் பக்கம் பார்க்க

## குடியேற்றம் மீது தாக்குதல் 24 சிங்களவர்கள் பலி

அம்பாறை மாவட்டத்தின் எல்லைக்கிராமமான மொன ராகல ஒக்கம்பிட்டி நேற்று தாக்கப்பட்டதில் 24 சிங்கள வர்கள் கொல்லப்பட்டனர்.

தாக்கியவர்கள் சில வீடு களையும் வாகனங்களையும் தீக்கிரையாக்கியதாக தெரி விக்கப்படுகிறது.

ஒரு வாரத்திற்கு முன்பாக வும் இப்பகுதியில் நடைபெற்ற தாக்குதலில் 14 சிங்கள குடி யேற்றவாசிகள் கொல்லப்பட் டிருந்தமை தெரிந்ததே.

## குடிசை தீக்கிரை

குளவிக்கூட்டுக்கு வைத்த தீயால் ஓலைக் குடிசை முற் றாக எரிந்து சாம்பரானது.

— 4 ஆம் பக்கம் பார்க்க

## முரசொலிக்கு வந்த கடிதம்

# ஒய்வுபெற்ற ஆசிரியர் அவலநிலை

ஆசிரியர்,
முரசொலி

சுய விருப்பத்தின்பேரில் 31-12-90 தொடக்கம் ஒய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு உரிய இடைக்கால ஒய்வூதியப் பணம் இற்றை வரை வழங்கப்படவில்லை. பொருளாதாரத் தடையும் பொருட்களின் உச்சவிலையும் நிலவும் இக்கால கட்டத்தில் இவ்வாசிரியர்கள் நிலை என்ன? இதனை யாழ் கல்வித் திணைக்கள உயர் அதிகாரிகள் சிறிதேனும் சிந்தித்துப் பார்த்தார்களா? இடைக்கால ஒய்வூதியம் வழங்கப்படாதிருக்கும் நிலைக்கு இவ் அதிகாரிகளே பொறுப்பாவர். எனவே இனிமேலாயினும் அசட்டையாக இராது உடனடியாகச் செயற்பட்டு ஆசிரியர்களது இடரை இம்மாத முடிவின்முன் தீர்த்து வைத்தல் இவர்களது தலையாய கடனாகும் செய்வார்களா?

'மல்லிகை அகம்'
கோவில் வீதி,
நல்லூர்.

ந. கந்தவேள்
(பாதிக்கப்பட்ட ஆசிரியர்)

## அலுவலர் ஒன்றியம்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் எழுதுவினைஞர் தொழில்நுட்ப அலுவலர் ஒன்றிய முதலாவது ஆண்டுப் பொதுக்கூட்டம் அண்மையில் ஹோட்டல் ஞானம்ஸில் ஒன்றியத் தலைவர் பொ. கந்தசாமி தலைமையில் நடைபெற்றது நடப்புவருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் பொ. கந்தசாமி, உபதலைவர் கே. கதிர்காமராசா, இணைச் செயலர் டே. சற்குணராசா, தெ. சிவபாதம், பொருளாளர் சிவ. சிவகுமாரன் உபபொருளாளர் இ. தில்லைநாதன், பொது நல உத்தியோகத்தர் செ. இரத்தினசோதி, செயற்குழு உறுப்பினர்களாக ஆறுபேரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

சிறப்பு விருந்தினர்களாக பல்கலைக்கழக துணைவேந்தர், பதிவாளர் நிதியாளர் கலந்துகொண்டனர். (30)

## பதிவேடுகள் சீரமைப்பு

இராணுவ நடவடிக்கைகளினால் கிளிநொச்சி பிரதேச சபைக் கட்டிடம் சகல ஆவணங்களுடனும் எரிந்துள்ளதால் தற்போது மீள செலுத்தப்பட வேண்டிய வைப்புகள் சம்பந்தமாக வரியிறுப்பாளர் வசமுள்ள பற்றுச் சீட்டுகளை கரைச்சிப் பிரதேசசபையில் சமர்ப்பித்து உரிய பதிவேடுகளைச் சீரமைக்க உதவுமாறு கரைச்சி பிரதேச சபை விசேட ஆணையாளர்

## அன்னையின் நினைவாக

அன்னை பூபதி 3ஆம் வருட நினைவு நிகழ்ச்சி பாஷையூர் புனித அந்தோனியார் விளையாட்டு மைதானத்தில் திரு அ. செபஸ்தியாம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

அரியாலைப் பிரதேசப் பொறுப்பாளர்கள் திரு. பசீர், பாண்டியன் ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டனர்.

அன்னை பூபதி நினைவாக உள்ளூர் உதைபந்தாட்டப் போட்டி சிறப்பு நிகழ்ச்சியாகப் பாஷையூர் சிற்றாரவையின் ஆதரவில் நடைபெற்றது.

பாஷையூர் சிற்றாரவைத் தலைவர் திரு. க. சதிவானந்தசிவமும் அன்னை பூபதி நினைவாக உரை நிகழ்த்தினார்.

9 கழகங்கள் பங்குபற்றிய போட்டியின் இறுதிப்போட்டியில் மக்கள் படையும், யுப்பிறன் கழகமும் இறுதியாட்டத்தில் கலந்துகொண்டு யுப்பிறன் கழகம் வெற்றியீட்டியது.

1வது, 2வது இடங்களைப் பெற்ற கோஷ்டிகளுக்கு பாஷையூர் சிற்றாரவையின் உபதலைவர், வீரமரணமடைந்த யோசவியின் தாயார். திருமதி பிலோமினா பிரான்சிஸ் வெற்றிக் கேடயங்களை வழங்கிக் கௌரவித்தார். திரு. எஸ். இ. பெனான்டோ நன்றியுரை நிகழ்த்தினார். (16)

## மஞ்சள் இல்லம் வெற்றி பெற்றது

## கடனுதவி இவ்வருடமில்லை

பண்டத்தரிப்பு வை. எம். சி. ஏ நிறுவனம் விவசாய அபிவிருத்திக்காக வருடம் தோறும் வழங்கி வந்த ஆயிரம் ரூபா கடனுதவி இவ்வருடம் வழங்கப்படவில்லை. எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டில் வை. எம். சி. ஏ. யிடமிருந்து கடனுதவியாக ஆயிரம் ரூபாவைப் பெற்றவர்களில் பெரும்பாலானவர்கள் அதனை முறைப்படி திருப்பிச் செலுத்தத் தவறிவிட்டதாகவும் இதனால் 1991ஆம் ஆண்டிற்கான கடனுதவி வழங்கப்படவில்லை என்றும் இது பற்றி மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (13)

## பருத்தித்துறை உதவி அரச அதிபர்

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபராக ஸ்ரீலங்கா நிர்வாக சேவையைச் சேர்ந்த திரு. செல்லமுத்து ஸ்ரீனிவாசன் வடக்கு கிழக்கு மாகாண சபையால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை பதில் உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய திரு எம். தம்பிப்பிள்ளை கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் அலுவலக நிர்வாக உத்தியோகத்தராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (15)

## பள்ளாவுக்கு விருது

இந்தியப் படையினருக்கான விருது வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இலங்கையில் வடக்கு கிழக்கில் இந்தியப்படைகள் நிலை கொண்டிருந்த போது அதிகாரியாக பணியாற்றிய மேஜர் ஜெனரல் எம். எம். பள்ளாவுக்கு விருது வழங்கப்பட்டது.

## துலா மிதிப்பும், பட்டை இறைப்பும் உள்ளடங்கும்,

# உழைப்பாளரை மே தினத்தன்று கௌரவிக்க வி. பு. ஏற்பாடு

தமிழீழ மண்ணில் வாழும் உழைக்கும் மக்களை இவ்வருட மேதினத்தன்று கௌரவிப்பதற்கு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக முன்னணி விடுத்துள்ள விரிவான அறிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு தமிழீழ ஆய்வு நிறுவனம் கைத்தொழில், கடற்றொழில், விவசாயம் மற்றும் உணவு உற்பத்தித் துறைகள் தொடர்பான போட்டிகளை தென்தமிழீழம் தவிர்ந்த தமிழீழத்தின் அனைத்து மாவட்டங்களிலும் பிரதேச ரீதியாக அல்லது பிரிவு ரீதியாக நடாத்தி வெற்றி பெறுவோர் பரிசில்களை வழங்கிக் கௌரவிக்கப்படுவர்

மே தினத்தன்று ஒவ்வொரு பிரதேசங்களில் அல்லது பிரிவுகளில் நிலமற்ற வசதியற்றவர்களுள்ள விவசாயக் குடும்பங்களுக்கு கிராமிய உற்பத்திக் குழுக்கள் மூலமாக தரிசாக விடப்பட்ட விவசாய நிலங்களை பயிர்ச்செய்கைக்கு தற்காலிகமாகப் பயன்படுத்துவதற்காக வழங்கப்படும்.

சிரமதானம்:

அதனோடு மே தினத்தில் குளம் திருத்துதல், வாய்க்கால் புனரமைத்தல் போன்ற வேலைகளைச் சிரமதானம் மூலம் செய்வதற்கு ஆரம்ப வேலைகள் பிரதேச ரீதியாக அல்லது பிரிவு ரீதியாக மாவட்டம் தோறும் மேற்கொள்ளப்படும். மே தினத்தன்று காலை 6.00 மணி தொடக்கம் 9.00 மணிவரை இந் நிகழ்ச்சிகள் நடாத்தப்பட வேண்டும். மே தினத்தை அடுத்து வரும் தினங்களில் இவ்வாறு ஆரம்பித்து வைக்கப்படும் வேலைத் திட்டங்கள் முடிக்கப்படும்.

மே தினத்தை யொட்டி மாவட்டங்கள் தோறும் நடைபெறவுள்ள போட்டி நிகழ்ச்சிகள்:-

1. பதனீர் வடித்தல் :

பனை மரத்தில் குறிப்பிட்ட அளவு உயரத்தில் கட்டப்பட்டுள்ள மணியை ஒருவர் ஏறி ஒலிக்கச் செய்துவிட்டு இறங்கி தரையில் கால் மிதிக்க வேண்டும். இறங்கும்போது மரத்தில் சறுக்கியபடியோ அல்லது மரத்தை விட்டுப் பாய்ந்தோ தரையை அடைவது போட்டி விதிகளை மீறியதாகக் கருதப்படலாம்.

2 துலா மிதித்தல்:

பாரம்பரிய முறையில் ஒருவர் துலா மிதிக்க இன்னுமொருவர் பட்டையால் நீரிறைக்க வேண்டும். போட்டியாளர்கள் சோடியாகப் பங்கு பற்ற வேண்டும்

3 உழவு செய்தல்:

குறிப்பிட்ட விஸ்தீரணமுள்ள உழுத நிலத்தை மாட்டினால் மரக்கலப்பை கொண்டு உழ வேண்டும் கலப்பை நிலத்தினுள் செலுத்தப்படும் ஆழம் உழவு செய்த வரிகளுக்கிடையில் இடைவெளி முறையே குறிப்பிட்ட அளவுக்குக் குறையாமல் அல்லது கூடாமல் இருக்க வேண்டும்.

4. பாய்மர ஓட்டம்:

5 தண்டு வலித்தல்:

இவற்றிற்கான விபரங்களை அவ்வப் பகுதியிலுள்ள கடற்றொழில் சங்கங்கள் அல்லது பிரதேச இணைப்பாளர் அல்லது பிரிவு இணைப்பாளர்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

6. கைப்பணி:-

(அ) பனையோலையால் பெரிய குட்டான் இழைத்தல்.

¼ அங்குல அகலமுடைய ஓலையில் 10" உயரமும் 5" விட்டமும் உடைய குட்டான் இழைக்கப்பட வேண்டும். போட்டியாளர்கள் இதற்கு தேவையான ஓலையைக் கொண்டு வர வேண்டும்.

ஆ) தென்னை ஓலையால் கிடுகு இழைத்தல்:-

சம அளவான தென்னை ஓலையால் கிடுகு இழைக்க வேண்டும்.

(7) சிறு கைத்தொழில்:

மூலப் பொருள்கள் பெறக்கூடிய பிரதேசங்களில் தும்புத்தடி அல்லது தடிவிளக்குமாறு போன்றவற்றைச் செய்தல்.

8 புதியவகை உணவு

உள்ளூர் மூலப் பொருள்களைக் கொண்டு புதியவகை உணவுப் பொருள்களைத் தயாரித்தல்:

உள்ளூர் உற்பத்திப்பொருள்களை உபயோகித்து புதிய உணவுப் பொருள்களைத் தயாரித்து கையளிக்க வேண்டும். தயாரித்த முடிவுப் பொருள் 200 கிராம் நிறைக்குக் குறையாமல் இருக்க வேண்டும் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட மூலப் பொருள்களின் பெயர், அளவு விபரங்களுடன் செலவையும் முடிவுப் பொருள் அளவையும் செய்கை முறையையும் தயாரித்த உணவுப் பொருள்களுடன் எழுத்தில் சமர்ப்பிக்க வேண்டும் (செய்கைமுறையில் பேணப்பட்ட சுகாதாரம், சுவை, கவர்ச்சி, உறையிடல், போத்தல் அல்லது வேறு கொள்கலன்களிலடைத்தல் போன்றவை பொருட்களின் தரங்களைத் தெரிவு செய்யும் போது மத்தியஸ்தர்களால் கருத்தில் கொள்ளப்படலாம்

யாழ் மாவட்டத்திற்கான ஏற்பாடுகள்:

போட்டிக்கான விண்ணப்பங்கள் 24. 04. 91க்கு முன் அந்தந்தப் பிரிவு கிராமிய உற்பத்திக் குழுக்களிடம் கையளிக்கப்படல் வேண்டும். போட்டியாளர்கள் பெயர், வயது, விலாசம் என்பவற்றைக் குறிப்பிட்டு பங்குபற்ற விரும்பும் போட்டியின் பெயரையும் விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும் பிரிவு

## பட்டமளிப்பு

பருத்தித்துறை வியாபாரி மூலை விநாயக தரும நிதியத் தலைவர் ஆ. இ முருகுப்பிள்ளைக்கு யாழ் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் ஏ. துரைராஜாவினால் "அறத்தமிழ் காவலர்" என்னும் பட்டம் சூட்டப்பட்டது:

சதாவதானி கதிரவேற்பிள்ளையின் 84 ஆவது ஆண்டு நினைவுவிழாவிலேயே

## கவிஞர் சுரதா மீது பாவேந்தர் பாரதிதாசன் மகள் சீற்றம்

கவிஞர் சுரதா... தனித்துவமான ஆற்றல் மிக்கவர் அவர் நுனிப்புல் மேய்ந்தவருமல்லர். அரைவேக்காட்டுப் போவழியுமல்லர் யதார்த்தபூர்வமான கருத்துக்களை அப்பட்டமாகத் தன் எண்ணத்தை எழுத்துருபத்தில் வடிப்பவர். மக்கள் எழுச்சி காணத்துடிப்பவர். தமிழக ஆஸ்தான கவிஞர் விதானத்திற்குப் பொருத்தமுடையவர் எனப் பேரறிஞர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டவர் அவருடன் நூற்றாண்டு விழாக் காணும் பாரதிதாசனின் குடும்பம் இப்போது கோபம் கொண்டுள்ளது. பாவேந்தர் பாரதிதாசனின் மகள் வஸந்தா கவிஞர் சுரதா மீது கண்டனங்களைத் தொடுத்து வருகிறார் இது பற்றிய செய்தி ஒன்றினைத் தமிழக வார இதழ் ஒன்று வெளியிட்டுள்ளது அதில் கூறப்படிருப்பதாவது "பாரதிதாசன்

யில் சமர்ப்பித்து உரிய பதி
வேடுகளைப் சீரமைக்க
உதவுமாறு கரைச்சி பிரதேச
சபை விசேட ஆணையாளர்
கேட்டுள்ளார்.

அதேபோன்று சோலை வரி,
மின் கட்டணம் என்பன 1990
ஆம் ஆண்டுக்குப் பின்பு
செலுத்திய பற்றுச் சீட்டு
களையும் சமர்ப்பித்து புத்த
கத்தில் வரவு வைக்க ஆவன
செய்யுமாறும் அவர் கேட்டுள்
ளார்.

அதேபோல் பிணைப்பணங்
கள் என்பவற்றின் பற்றுச்சீட்
டுக்களையும் எதிர் வரும்
8-5-91க்கு முன் சமர்ப்பிக்கு
மாறும் தவறின் கோரிக்கை
களை நிராகரிக்கும் நிலை ஏற்
படுமெனவும் அறிவிக்கப்பட்
டுள்ளது.

## விநாயகர் உற்சவம்

ஆனைக்கோட்டை உயரப்
புலம் உத்துங்க விநாயகர்
கோவில் வருடாந்த மகோற்
சவம் வெள்ளிக்கிழமை கொடி
யேற்றத்துடன் ஆரம்பமாகி
யது.

இக்கோவில் தேர்த்திரு
விழா எதிர்வரும் 28 ஆம்
திகதி ஞாயிற்றுக்கிழமையும்
தீர்த்தத் திருவிழா 29 ஆம்
திகதி திங்கட்கிழமையும்
சிறப்பாக நடைபெறவுள்ளது.
(12)

நிகழ்த்தினார். (10)

## மஞ்சள் இல்லம் வெற்றி பெற்றது

கொழும்புத்துறை துரை
யப்பா வித்தியாலய மெய்
வல்லுநர் போட்டி அண்மை
யில் நடைபெற்றது.

யாழ் உதவிக் கல்விப்
பணிப்பாளர் இ. தியாகராசா
இவ்விழாவில் பிரதம விருந்
தினராகக் கலந்து கொண்
டார்.

மூன்று இல்லங்களுக்கி
டையே நடைபெற்ற இப்
போட்டியில் மஞ்சள் இல்லம்
212 புள்ளிகளைப் பெற்று
முதலாம் இடத்தையும்,
சிவப்பு இல்லம், நீல இல்லங்
கள் இரண்டாம் மூன்றாம்
இடங்களையும் பெற்றன.

## இங்கும் கற்பகம்

பண்டத்தரிப்புத் தெங்கு
பனம் பொருள் உற்பத்தி விற்
பனவுக் கூட்டுறவுச் சங்கம்
பண்டத்தரிப்பில் "கற்பகம்
விற்பனை நிலையம்" ஒன்றை
விரைவில் ஆரம்பிக்கவுள்ளது.

சங்கத்தின் பனம் பொருள்
உற்பத்திப்பொருள்கள் யாவும்
இந்த விற்பனை நிலையத்தில்
வைத்து மக்களுக்குச் சகாய
விலையில் விற்கப்படவுள்ள
தாக தெரிவிக்கப்படுகிறது.
(13)

வஸந்தா கவிஞர் சுரதா மீது கண்டனங்களைத்
தொடுத்து வருகிறார் இது பற்றிய செய்தி ஒன்றி
னைத் தமிழக வார இதழ் ஒன்று வெளியிட்
டுள்ளது அதில் கூறப்பட்டிருப்பதாவது "பாரதிதாசன்
மகள் வஸந்தா, கவிஞர் சுரதா மீது கண்டனம் தெரி
வித்துள்ளார்" என் தந்தையாரின் 'குடும்ப விளக்கு'
என்ற நூலுக்கான தலைப்பைத் தாமே தேர்ந்தெடுத்
ததாகக் கவிஞர் சுரதா கூறியுள்ளார் முன்பே ஒரு
முறை முருகசுந்தரம் தொகுத்த "அரும்புகள், மொட்
டுகள், மலர்கள்" என்ற நூலில் இடம்பெற்றுள்ள
'மார்கழியின் உச்சியிலே' என்ற இவரது கட்டுரையில்
'குடும்ப விளக்கு' நூலுக்குத் தாம் தலைப்புக் கொடுத்
ததாகக் கூறியிருந்தார். நாளைடைவில் பாவேந்தர்
பாட்டெல்லாம் தான் தான் எழுதிக் கொடுத்ததாகச்
சொன்னாலும் சொல்வார்.

பாவேந்தர் குடும்பத்தார் யாவரும் உயிருடன்தான்
இருக்கிறோம். ஷெல்லி. ஷேக்ஸ்பியர், ஒட்டக்கூத்
தர், ஒளவையார், கம்பர், கபிலர், இளங்கோவடிகள்,
புகழேந்திப் புலவர், பாரதியார் எல்லாரையும் மிஞ்
சிய கவிஞராகச் சுரதா இருக்கலாம். அதைப்பற்றி
எமக்குக் கவலையில்லை இனிமேல் இதுபோன்று கூறு
வதை உறுதியாக நிறுத்திக் கொள்வார் என்று நம்புகி
றேன்" என்று வஸந்தா கூறியுள்ளார்.

## சங்கானைச் சந்தையில் வியாபாரிகள் மோசடி

சங்கானைப் பொதுச்சந்தை
யில் மரக்கறி வகைகளைச் சில்
லறையாக வைத்து விற்பனை
செய்யும் வியாபாரிகள் பழுத
டைந்ததும், சேதமடைந்தது
மான தராசுகளைப் பயன்
படுத்துவதாகப் புகார் தெரி
விக்கப்படுகிறது.

முத்திரையிடப்படாத தரா
சுப் படிகளையும் இவ்வி
லை வியாபாரிகள் பயன்
படுத்துவதாகவும் தெரிவிக்கப்
படுகின்றது. (13)

னும் பட்டம் சூட்டப்பட்டது.

சதாவதானி கதிரவேற்
பிள்ளையின் 84 ஆவது
ஆண்டு நினைவுவிழாவிலேயே
இப்பட்டம் சூட்டப்பட்டது.
விநாயகர் தருமநிதிய ஸ்தா
பகர் திரு. முருகுப்பிள்ளை
யின் அறப்பணிகளும், இலக்க
நூல்வெளியீடுகளும் பற்றி
ஆசிரிய கலாசாலை அதிபர்
திரு. வை. கா சிவப்பிரகாசம்
சட்டத்தரணி வ.கு கணபதிப்
பிள்ளை, இளைப்பாறிய பிர
தம கல்வியதிகாரி திரு. ஆ
வ. தங்கராஜா ஆகியோர்
உரையாற்றினர். அறத்தமிழ்
காவலர் திரு.முருகுப்பிள்ளை
யும் உரையாற்றினார். (15)

றைக் குறிப்பிட்டு பங்கு பற்ற
விரும்பும் போட்டியின் பெய
ரையும் விண்ணப்பத்தில்
குறிப்பிட வேண்டும் பிரிவு
இணைப்பாளர்கள் போட்டிக
ளில் 1 ஆம், 2 ஆம், 3 ஆம்
இடங்களைப் பெற்றவர்களின்
பெயர் விபரங்களை
25 04 91க்கு பிந்தாமல்
தமிழீழ ஆய்வு நிறுவன யாழ்
மாவட்ட அலுவலகத்திற்கு
அனுப்ப வேண்டும். மாவட்
டத் தெரிவுக்கான போட்டி
களில் 1 ஆம், 2 ஆம், 3 ஆம்
இடங்களைப் பெறுபவர்களுக்
கும் மே தினத்தன்று மேதினக்
கூட்ட மேடையில் வைத்து
பரிசில்கள் வழங்கப்படும்.


**PURCHASE OF DRUGS FOR THE PRIVATE SECTOR**

All Concerned (Pharmacies, Private Hospitals and individual practitioners) are kindly requested to attend a meeting to discuss future purchases of drugs.

Venue : Van. West Clinic, Aiyanar Kovilady, Thattartheru, Jaffna.

Time : 4 p. m. on Tuesday 23-4-91.

04098 ORGANISERS

# பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையை மூடும் எண்ணம் அரசுக்கு இல்லை - செல்லச்சாமி

''பரந்தன் இரசாயன ஆலையை மூடும் திட்டம் எதுவும் அரசாங்கத்திற்குக் கிடையாது'' இவ்வாறு கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் திரு. எம். எஸ். செல்லச்சாமி தெரிவித்தார்.

''மேற்படி தொழிற்சாலை எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் மூடப்பட மாட்டாது. அவ்வாறான எந்த ஒரு திட்டமும் எம்மிடமில்லை என்று அவர் தனது இல்லத்தில் நடாத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

''வேறு பகுதிகளிலும் இரசாயனத் தொழிற்சாலைகளை உருவாக்க நாம் திட்டம் தீட்டியுள்ளோம். அதனால் பரந்தன் தொழிற்சாலை மூடப்படும் என்று அர்த்தமாகாது. வடக்கு, கிழக்குப் பகுதிகள் வழமைக்குத்திரும்பியவுடன் பரந்தன் தொழிற்சாலையை இயங்கச் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்'' என்றும் அவர் மேலும் கூறினார்.

## 'வங்கிச் சேவைகள் மக்கள் வாழ்வுடன் இணைந்தவை'

''பருத்தித்துறை இலங்கை வங்கி, வடமராட்சிப் பகுதியில் இந்திய இராணுவம், ஸ்ரீலங்கா இராணுவம் மேற்கொண்ட பயங்கரக் கெடுபிடிகளின் போதும் வாடிக்கையாளர்களுக்கு ஆற்றிய சேவைகளைப் பாராட்டவேண்டும். மேலும் இவ்வங்கி வாடிக்கையாளர்களுக்குச் சிறந்த சேவைகளை வழங்குவதற்கு வங்கியின் வாடிக்கையாளர்கள் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.''

மேற்கண்டவாறு, பருத்தித்துறை இலங்கை வங்கியிலே நடாத்தப்பட்ட விசேட வட்டியுடன் சேமிப்புச் சான்றிதழ்கள் வழங்கும் வைபவத்திலே கலந்துகொண்டு உரையாற்றிய பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எம். கதிரவேற்பிள்ளை குறிப்பிட்டார்.

பருத்தித்துறை இலங்கை வங்கிக் கட்டிடத்தில் வங்கி முகாமையாளர் திரு. எம். மகாலிங்கம் தலைமையில் இவ்விழா நடைபெற்றது. டாக்டர் கதிரவேற்பிள்ளை தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:- வங்கிச் சேவைகள் மக்களின் வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்துள்ளன. மக்கள் வங்கிகளினால் பல்வேறு வகையான நன்மைகளைப் பெற்று வருகின்றனர். வங்கி வழங்கும் சேவைகளை மக்கள் முழுமையாகப் பயன்படுத்துவதற்கு மக்களின் ஒத்துழைப்பே முக்கியமாகும். பருத்தித்துறை இலங்கை வங்கி ஊழியர்கள் சேவை மனப்பான்மையுடனும், மக்களைத் திருப்திப்படுத்தும் நோக்குடனும் இயங்கி வருகின்றனர். இன்று இடம்பெறும் சேமிப்புச் சான்றிதழ்கள் வழங்கும் வைபவம் இப்பகுதி மக்களுக்கு மிக நன்மை பயக்கும் நடவடிக்கையாகும்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அதிபர் பொ. பாலசிங்கம், பருத்தித்துறை தேசிய சேமிப்புவங்கி முகாமையாளர் கே. கமலசேகரும், கடன் வழங்கு முகாமையாளர் எஸ் சிவராமலிங்கம், வங்கி உத்தியோகத்தர் கே. கருணாநிதி ஆகியோரும் உரையாற்றினர். (15)

## சிவல் தொழிலாளர்கள் புறக்கணிப்பு எனப் புகார்

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பெரும்பாலான சிவல் தொழிலாளர்களுக்கு அரசினால் வழங்கப்படும் திறன் முயற்சி நன்கொடைப்பணமான 4000 ரூபா வழங்கப்படவில்லை என்று முறையிடப்பட்டுள்ளது.

கலவரகாலங்களில் தொழில் பாதிப்படைந்த ஏனைய விவசாயம், கடற்றொழில் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு 4000 ரூபா நிவாரணமாக வழங்கப்படுவதைப் போல கள்ளிறக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள சிவல் தொழிலாளர்களுக்கும் நிவாரணம் வழங்கப்படவேண்டுமென்று பண்டத்தரிப்பு தென்னைபனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபரிடமும் யாழ்மாவட்ட அரசாங்க அதிபரிடமும் மகஜர் ஒன்றின் மூலம் கோரிக்கைவிடுத்துள்ளது. (13)

## முல்லைக்கு 22 லொறிகளில் உணவுப் பொருள்கள்

கொழும்பிலிருந்து நேரடியாக இருபத்து இரண்டு லொறிகளில் முல்லைத்தீவுக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்கள் எடுத்துச் செல்லப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க ஏற்பாட்டில் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் திரு. கந்தசாமியும் இப்பொருள்களுடன் புறப்பட்டுள்ளார் என்றும் கொழும்பு வட்டாரங்கள் கூறின.

## உற்சவம்

வட்டுக்கோட்டை அடைக்கலம் தோட்டம் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

இம்மாதம் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன (12)

## அல்வாய் பிள்ளையார் உற்சவம்

அல்வாய் சாமணந்தறை ஆலடி விநாயகராலய தேர்த்திருவிழா இம்மாதம் 27 ஆம் திகதி நடைபெறவுள்ளது 28 ஆம் திகதி சித்திரா பௌர்ணமித் தினத்தன்று எம்பெருமானின் தீர்த்தத் திருவிழா வெகு சிறப்பாக இடம்பெறும் (15)

## நாளைய பரீட்சை; பாதுகாப்பு அமைச்சு கூறும் தகவல்

வட, கிழக்கில் நாளை நடைபெறவுள்ள விசேட க. பொ. த உயர்தரப் பரீட்சையை முன்னிட்டு பரீட்சை மண்டபங்கள் அமைந்துள்ள பகுதிகளில் பாதுகாப்புப் படையினரின் நடவடிக்கைகள் எதுவும் இடம்பெற மாட்டாது என பாதுகாப்பு அமைச்சு உயரதிகாரிகள் பரீட்சைத் திணைக்களத்திடம்

## குவைத்தில் வேலையிழந்த இலங்கையர் புனர்வாழ்வுக்கு விசேட திட்டம்

குவைத்தில் வேலையிழந்த இலங்கையர்க்கு புனர்வாழ்வளிக்கும் விசேட திட்டம் ஒன்றின் கீழ் அவர்களுக்கு மாற்று வேலைவாய்ப்பு வழங் ஐக்கிய நாடுகள் அகதிகள் புனர்வாழ்வு ஆணைக்குழு ஆகியவற்றைச் சேர்ந்த பிரதிநிதிகள் இலங்கை வந்துள்ளனர். டன் ஆராய்ந்துள்ளனர்.

பல்வேறு விடயங்கள் இது தொடர்பாக ஆராயப்பட்டுள்ளன.

இவ்வருக்குள்ள பிரதிநிதி

---

நாவலர் பணிகள் பன்முகப்பட்டவை. சமூகத்தின் தேவை உணர்ந்த செயல்கள். நம் மக்கள் பெருமளவில் அகதிகளாகியுள்ள இன்றைய நிலையில், நாவலர் நிறுவிய கஞ்சித்தொட்டி பற்றிய தகவல்கள் மிக்க பயன்தரும்.

## நாவலர் நிறுவிய கஞ்சித் தொட்டித் தருமம்

### பஞ்சமும்பிணியும்

1876 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் மழை மிகக் குறைவாகப் பெய்தது. அதற்கு முந்திய சில ஆண்டுகளிலும் வான் பொய்த்தது.

''விசும்பிற் றுளிவீழி னல்லான்மற் றாங்கே
பசும்புற் றலைகாண் பரிது,'' (குறள்-16)

என்றவாறு யாழ்ப்பாணத்திற் பயிர் விளைவு ஏற்படவில்லை. நீர் நிலைகளாகிய குளம், கேணி வற்றின. நெல் முதலிய தானியப்பயிர், பயன்தரு மரங்கள், புகையிலைச்செடிகள் நீரின்றி அழிவுற்றன. மாடு, ஆடு முதலிய பயன் தரு விலங்குகளும் உண்ணுநீரின்றியும் உணவின்றியும் எலும்புந் தோலுமாகக் காட்சியளித்தன. கோதாரி (Cholera) என்னும் நோய் மக்களைப் பெரிதும் வருத்தியது. உணவுப் பொருள்களின் விலை, நெல், சாமை, குரக்கன் முதலிய தானியங்களின் விலை உயர்ந்தன. ஒரு பறை நெல்லின் விலை ரூபாய் இரண்டரை வரை உயர்ந்தது.

### பொருள் விலை ஏற்றம்

கடந்த ஆண்டுகளில் நான்கு சதம் தொடக்கம் ஆறு சதம் வரையில் விலைப்பட்ட சாமை இவ்வாண்டு ஒன்பது அல்லது பத்து சதம்வரையில் விலைப்பட்டது. ஏழை மக்கள் பனங்காயினை உண்ண விழைந்தனர். முன்பு அரைச் சதமாய்விலைப்பட்ட பனங்காய் இவ்வாண்டில் மூன்று அல்லது நான்குசதத்திற்கு விலைப்பட்டது. இரண்டு சதத்திற்கு விற்கப்பட்ட தேங்காய் இக்காலத்தில் ஐந்து அல்லது ஆறு சதத்திற்கு விற்கப்பட்டது. பஞ்சமும் கோதாரியும் மக்களிற் பலரின் உயிரினைப் பலி கொண்டன. பலர் தொழிலாற்ற முடியாமலுந் தம் உடல்நிலையைப் பேண முடியாமலுந் தவித்தனர்.

### நாவலர்முயற்சி

நாவலர் யாழ்ப்பாண மக்கள் பஞ்சத்தினாலும் கோதாரியினாலும் வருந்துவதைக் கண்ணுற்றார். மக்களின் துயரினைத் துடைக்க யாழ்ப்பாணச் சைவசமய வள்ளல்களை ஒன்று சேர்த்து ஏழைமக்களின் அன்றாட வாழ்க்கைக்கு உதவியளிப்பதென முடிவுசெய்தார். அவர்கள் தம் இனத்தோருக்கு நாடோறுங் கஞ்சி வார்ப்பதெனத் துணிந்தனர்.

### நாவலரின் சமூகஅக்கறை

நாவலர் தம் சமயப் பற்றினைக் கடந்து பிறரிடத்து மதிப்பு வைத்திருந்தாரென்பதைக் ''கரையூர்க் கலக வழக்கிலே அநீதியாகத் துன்பம் அனுபவித்த ஏழைகள் பக்கம் நின்று அதி தைரியத்தோடு வாதித்த'' பென்சமின் சந்தியாகுப்பிள்ளை (Benjamin Santiagopillai) என்னுங் கத்தோலிக்கரும் பிறக்கிராசியுமாகியவரைப் பற்றி வெகுசனத் துரோகம் என்னும் பிரபந்தத்திற் கூறியவற்றின் வாயிலாக அறியலாம். 1877 ஆம் ஆண்டிற் பஞ்சம், கோதாரி காரணமாகப் பல்வேறு சமயத்தவரும் தமிழர் ஒன்று பட்ட சமூகமென்பதை உணர்த்தும் முறையில் உழைத்தனர். உதயதாரகை, இலங்கை நேசன், கத்தோலிக்கப் பாதுகாவலன் முதலிய யாழ்ப்பாணச் செய்தித்தாள்களும் இத் நற்பணிக்கு வேண்டிய பிரசாரத்தினைச் செய்தன.

### தருமச் செலவு

ரூபா - சதம்

குவைத்தில் வேலையிழந்த இலங்கையர்க்கு புனர்வாழ் வளிக்கும் விசேட திட்டம் ஒன்றின் கீழ் அவர்களுக்கு மாற்று வேலைவாய்ப்பு வழங் கப்படும் எனத் தெரிவிக்கப் படுகின்றது.

இது தொடர்பாகச் சர்வ தேச தொழில் ஸ்தாபனம் ஐக்கிய நாடுகள் அகதிகள் புனர்வாழ்வு ஆணைக்குழு ஆகியவற்றைச் சேர்ந்த பிரதி நிதிகள் இலங்கை வந்துள்ள னர்.

குவைத்திலிருந்து இலங்கை திரும்பியுள்ள 74 ஆயிரம் பேரின் நிலைமை குறித்து அவர்கள் தொழிலமைச்சரு டன் ஆராய்ந்துள்ளனர்.

பல்வேறு விடயங்கள் இது தொடர்பாக ஆராயப்பட் டுள்ளன.

இங்கு வந்துள்ள பிரதிநிதி களுக்குச் சகல விவரங்களை யும் கொடுத்துதவுமாறு அமைச்சர் திரு. பிரேமச்சந் திரா அதிகாரிகளைப் பணித் துள்ளார்.

எதுவும் இடம்பெற மாட் டாது என பாதுகாப்பு அமைச்சு உயரதிகாரிகள் பரீட்சைத் திணைக்களத்திடம் உறுதி வழங்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தகவலை நேற்று கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (16)

# பத்திரிகையாளருக்கு பென்ஷன் சபைக்கு வருகிறது சட்டமூலம்

பத்திரிகையாளர்களுக்குப் பென்ஷன் வழங்கும் சட்ட மூலம் அடுத்தவாரம் பாராளு மன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களைத் தவிர நாட்டுக் கும், இனத்துக்கும், சமூகத்துக் கும் சேவைசெய்துள்ள சமூக சேவையாளர்கள் எழுத்தாளர் கள் ஆகியோருக்கும் பென்ஷன் வழங்குவதற்கான திட்டம் ஒன் றினைச் செயற்படுத்தத் தொழி லமைச்சர் பிரேமச்சந்திரன் தீர்மானித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

# ஹோமியோபதி பரீட்சை இன்னமும் நடத்தப்படவில்லை

ஹோமியோபதி டாக்டர்க ளுக்கான பரீட்சை கடந்த இரண்டரை வருடங்களாக நடைபெறவில்லை.

ஹோமியோபதிச் சங்கம் 1970இல் அரசால் அங்கீகரிக் கப்பட்டு நூற்றுக்கு மேற் பட்டோரை ஹோமியோபதி வைத்திய சங்கம் பதிவு செய் துள்ளது.

1983இல் சுகாதார அமைச்சு ஒரு பரீட்சையும், இந்த வைத் திய சபை இரண்டு பரீட்சை களையும் நடத்தியுள்ளனர்.

1988 டிசம்பரில் நடை பெற்றிருக்க வேண்டிய இப் பரீட்சையை நாட்டு நிலைமை காரணமாக 1989இல் நடாத் தப் போவதாக அரசு அறி வித்தும் இதுவரை அப் பரீட்சை நடைபெறவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (38,

உள்ளூராட்சிச் சபைகள்;

# புதிய அங்கத்தவர்களுக்கு பயிற்சி வழங்க ஏற்பாடு

உள்ளூராட்சிச் சபைகளுக் குத் தெரிவு செய்யப்படும் புதிய அங்கத்தவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும்

இதற்கான ஏற்பாடுகளை பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு மேற் கொண்டுள்ளது என்று தெரி விக்கப்படுகின்றது.

தேர்தலில் தெரிவாகும் மாநகர முதல்வர், பிரதி மாநகர முதல்வர், தலைவர், பிரதித் தலைவர் ஆகியோ ருக்கும் இப் பயிற்சி நெறிகள் வழங்கப்படும் என்றும் அறி விக்கப்பட்டுள்ளது.

# ஜே. ஆர். ஜப்பான் செல்கிறார்

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா ஜப்பான் செல்லவுள்ளார்.

ஜப்பானில் அமைக்கப்பட் டுள்ள அவரது உருவத்தைக் கொண்ட அடையாளக் கல்லைத் திறந்து வைப்பதன் பொருட்டே அவர் அங்கு செல்கிறார் என்று தெரிவிக் கப்படுகிறது.

செய்தித்தாள்களும் இத் நற்பணிக்கு வேண்டிய பிரசாரத்தி னைச் செய்தன.

தருமச் செலவு

| | ரூபா | - | சதம் |
|---|---|---|---|
| நாளொன்றுக்கு அரிசி பறை 5 | 18 | - | 00 |
| தேங்காய் 50 | 1 | - | 50 |
| விறகு | | - | 75 |
| உப்பு | | - | 25 |
| நான்கு சமையலாள் | 1 | - | 00 |
| பனையோலை வெட்டுக் கூலி | | - | 8 |
| | 21 | - | 58 |

இத் தருமத்தின் வரவுசெலவுக் கணக்கு விபரங்கள் யாவும் கு. செல்வநாயகம்பிள்ளை என்பவரால் இலங்கைநேசன் இதழ்களில் அவ்வப்போது வெளியிடப்பட்டன.

நடவடிக்கைகள்

வண்ணார்பண்ணையிலுள்ள இறாம்பியடியில் வாழும் திரு. வைத்தியநாதர் பொன்னம்பலம் என்பவரின் தென்னந்தோப் டத்தில் நாடோறுங் கஞ்சி சமைத்து ஏழைமக்களுக்கு உதவு வதென நாவலரும் ஏனையோரும் முடிவு செய்தனர். கஞ்சி உணவு பெரிய தொட்டியில் இடப்பட்டு உபகரிக்கப்பட்டதி னாற் கஞ்சித்தொட்டியென அத் தருமத்திற்குப் பெயர் எழ லாயிற்று. இக் கஞ்சி, அரிசி, தேங்காய், உப்பு முதலிய உப கரணங்களுடன் ஆக்கப்பட்டுப் பனையோலையினால் இழைக் கப்பட்ட தொன்னையில் மக்களுக்கு வழங்கப்பட்டது.

ஊக்குவித்த உத்தமர்

கஞ்சித்தொட்டித் தருமத்தில் நாவலருடன் முன்னின்று உழைத்தவர் இ. பிறிற்றோ (C. Brito) ஆவர். இவர் மானிப் பாயினைச் சேர்ந்தவர். நன்னித்தம்பி முதலியாரினதும் சேர் பொன்னம்பலம் இராமநாதனினதும் உறவினர். இவர் கஞ் சித் தொட்டித் தருமத்திற்கென ரூபா 45 உதவினார்.

(தொடரும்)

# விவரங்கள் அறிவிக்காத பாடசாலைகளுக்கு நிதியுதவிகள் வழங்கப்பட மாட்டாது

வடக்கு கிழக்கு பகுதியி லுள்ள பாடசாலைகளின் பௌதிக வசதிகள் பற்றிய தேவைகளை அறிவிக்கும் படியும் அவ்வாறு அறிவிக்காத வறும் பாடசாலைகளுக்கு எவ்வித நிதியும் வழங்கப்பட மாட்டாது எனவும் மாகாண கல்வியமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பான சுற்று நிருபம் சகல கோட்டக் கல்வியதிகாரிகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

ஜூம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் இது தொடர்பான விவரங்களை தமக்கு அனுப்பி வைக்குமாறும் அவ்வாறு அனுப்பாத பாடசாலைகளுக்கு இந்த உதவி வழங்கப்பட மாட்டாது எனவும் மாகாணக் கல்வியமைச்சு செயலாளர் தமது சுற்று நிருபத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அச்சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

● கோட்டத்திலுள்ள பாடசாலைகளில் ஒரு மாணவருக்கு 10 ச. அடி வீதம் சகல மாணவர்களுக்கும் கட்டிடவசதி குறைவாக இருக்கும் பாடசாலைகளில் மாணவர்களின் தொகையும், தற்போதுள்ள வகுப்பறை கட்டடங்களின் அளவுகளின் மொத்த விஸ்தீரணம்.

● ஐந்தாம் ஆண்டுக்கு மேற்பட்ட பாடசாலைகளில் விஞ்ஞான ஆய்வுகூடங்கள் இல்லாத பாடசாலைகளின் தேவை பற்றிய பட்டியல்.

● மலசலகூடம், கிணறு, குடிநீர் வசதிகள் ஏதும் இல்லாத பாடசாலைகளின் பட்டியலும், குறைவாக உள்ள பாடசாலைகளின் பெயர்ப் பட்டியலும்.

● பாடசாலைகளில் தொழில் நுட்பப் பாடங்கள் விஞ்ஞான பாடங்கள் கற்பிப்பதற்கு உபகரணங்கள் குறைவாக உள்ள பாடசாலைகள் என்பனவே. (78)

## சகல தரப்பு ஊழியருக்கும் புதிய சம்பளத்திட்டம்

நாட்டில் உள்ள அரச தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் சகல தரத்திலுமான ஊழியர்களின் புதிய அதிகரித்த சம்பளத் திட்டத்தை தொழில் அமைச்சு அறிவித்துள்ளது.

ஏப்ரல் மாதம் 1 ஆம் திகதியிலிருந்து இது நடைமுறைக்கு வருவதாக தொழில், தொழில் பயிற்சி அமைச்சின் செயலாளர் ஷியாமன் ஜயசிங்க அறிவித்துள்ளார்.

இது தொடர்பான விசேட வர்த்தமானியும் வெளியிடப்பட்டுள்ளது. (88)

## சிறந்த தபால் ஊழியருக்கு பரிசு வழங்கத்திட்டம்

இலங்கை தபால் சேவையின் 175 வது ஆண்டு நிறைவையொட்டி கடமையுணர்வுடன் சேவையாற்றும் இத்திணைக்கள ஊழியர்களுக்கு வருடந்தோறும் சிறந்த சேவை விருதுகளை வழங்க தபால் திணைக்களம் திட்டமொன்றை வகுத்துள்ளது.

இதன்படி சிறந்த தபால் அலுவலகம் உபதபால் அலுவலகம், முன்மாதிரியான தபால் ஊழியர் (சீருடை அணியாதவர்) முன்மாதிரியான சீருடை ஊழியர் ஆகியோரை தெரிந்து எடுத்து பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

முதலில் மாகாண ரீதியாக நடத்தப்பட்டு அதில் வெற்றி பெறும் முதல் மூன்று போட்டியாளர்களும் தேசிய மட்டத்தில் நடைபெறும் போட்டிக்கு தெரிவு செய்யப்படுவர் (33)

## வைத்தியசாலை ஊழியர்களுக்கு அடையாள அட்டையும் வேண்டும்

யாழ் போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் ஊழியர்கள் கடமையின் போது சீருடை அணிவதுடன் மட்டுமல்லாது வைத்தியசாலை அடையாள அட்டையையும் குத்தியிருக்க வேண்டும் என பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இதனை மீறும் ஊழியர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை கடமை நேரத்தின் போது மதுபோதையில் இருந்த ஊழியர் ஒருவர் நேற்று முன்தினம் பணிப்பாளரால் வேலையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (70)

## சித்தன்கேணியில் உணவுற்பத்தி ஐக்கிய நாணய சங்கம் முயற்சி

சித்தன்கேணி கலைநகர் நேதாஜி ஐக்கிய நாணய சங்கத்தினர் தமது உறுப்பினர்களை உற்பத்தித்துறையில் ஈடுபடுத்தும் முகமாக போதியளவு உரவகைகளையும் எரிபொருளையும் வழங்கி வருகின்றனர்.

இச் சங்கத்தினரின் ஊக்கத்தினால் சங்க உறுப்பினர்கள் தமது வயல்களிலும் தோட்டங்களிலும் நெல், பயறு என்பன முதலான உணவு உற்பத்திப் பயிர்களைச் செய்கை பண்ணி வருகின்றனர்.

இச்சங்கத்தினரின் ஆலோசனைக்கிணங்க சகல உறுப்பினர்களும் வீட்டுத்தோட்டங்களைச் செய்து வருவதும் குறிப்பிடத்தக்கது. 12

## வன்னிப் பகுதி அகதிகளுக்கு நோய்கள் பரவுகின்றன

வன்னிப் பகுதியில் உள்ள அகதிகள் பல்வேறு நோய்களுக்கு தொடர்ந்து இலக்காகி வருகின்றனர்.

இப்பகுதியில் உள்ள முகாம்களில் போதிய சுகாதார வசதிகள் மருந்துகள் கிடைக்காததாலேயே இவ்வாறு பாதிப்புக்குள்ளாகின்றனர்.

வயிற்றோட்டம், காய்ச்சல், மலேரியா போன்ற நோய்கள் அதிகமானோருக்கு இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 38

## அகதிமுகாம்கள் அமைக்க படைகள் ஈராக்கினுள் நுழைந்தன

ஈராக்கிய படைகளினால் விரட்டியடிக்கப்பட்ட குர்திஷ் அகதிகளுக்காக அகதிமுகாம்களை அமைக்கும் பொருட்டு அமெரிக்கப்படைகள் வட ஈராக்கினுள் நுழைந்துள்ளன இவர்களைத் தொடர்ந்து பிரிட்டிஷ், பிரேஞ் படைகளும் வட ஈராக்கினுள் சென்றன.

துருக்கியிலிருந்து 50 வாகனங்களில் சென்ற இப்படையினர் வட ஈராக்கில் சுமார் 15 அகதி முகாம்களை அமைத்து அங்கு குர்திஷ் இனமக்களை மீண்டும் குடியேற்ற நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளை வளைகுடாப் போரிற்கு தலைமை தாங்கிய அமெரிக்க நேசப்படைகளின் தளபதி நோர்மன் சிவாஷ்கோவ் ஐந்து மாதங்களின் பின் சவுதியில் இருந்து அமெரிக்கா புறப்பட்டுள்ளார்.

## மாங்குளத்தில் இப்படியும் கால்நடை திருடர்கள்!

மாங்குளம் வயல்பகுதிகளில் உள்ள கம்பிக்கட்டைகள் கால்நடைகள் நாளாந்தம் திருடப்பட்டு வருகின்றன

இடம்பெயர்ந்தவர்களது வயல்களில் கம்பிக்கட்டைகளை கழற்றி திருடர்கள் மற்றைய வயல்காரர்களுக்கு விற்றுவருவதோடு இடம்பெயர்ந்தவர்களது கால்நடைகளையும் திருடி அக்கம்பிக்கட்டைகளைப் பாவித்து இறைச்சியை வாட்டி வருகின்றனர்

இந்நடவடிக்கையால் வயல்கள் அழிந்து வருவதோடு, கால்நடைகளையும் திருடர்கள் அழித்து வருகின்றனர். 38

## மணி அன்பளிப்பு

வியாபாரி மூலை விநாயகர் தரும நிதியம் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரிக்கு இரண்டாயிரம் ரூபா பெறுமதியான மணி ஒன்றை அன்பளிப்புச் செய்துள்ளது.

இராணுவ நடவடிக்கையால் இப்பாடசாலையில் உள்ள மணி சேதமடைந்ததையடுத்து கல்லூரி அதிபர் திருமதி லீலாவதி சந்திரசேகரம் மேற்படி தரும நிதியத்தலைவர் இ. முருகுப்பிள்ளைக்கு சுட்டிக்காட்டியதையடுத்து இவ் அன்பளிப்புச் செய்யப்பட்டது. (38)

## நெடுந்தீவு - குறிகாட்டுவான் சேவை

## இரண்டு வாரங்களின் பின்னர் ஒரு படகே வந்து போனது!

கடந்த இரண்டு வாரங்களின் பின் நேற்று முன்தினம் காலை 9 மணிக்கு நெடுந்தீவில் இருந்து பிரயாணிகள் படகு குறிகாட்டுவான் இறங்குதுறைக்கு வந்து சேர்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்படகில் க. பொ. த உயர்தரப் பரீட்சை எடுக்கும் ஒருசில மாணவர்களும், நெடுந்தீவு பாடசாலைகளில் கற்பித்த ஆசிரியர்களும் மிகுந்த சிரமத்துடனும், பயத்துடனும் குறிகாட்டுவான் இறங்கு துறையை வந்தடைந்தனராம்.

உடனடியாக பிரயாணிகளை இறக்கிவிட்டு நெடுந்தீவுக்கு திரும்பிவிட வேண்டுமென நயினாதீவு கடற்படையினர் படகோட்டிகளை எச்சரித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ந்தும் படகுச்சேவை நடைபெறாது போனால் நெடுந்தீவு மக்கள் கடும் கஷ்டத்திற்குள்ளாவார்கள் எனத்தெரிவிக்கப்படுகிறது. மேலும் நெடுந்தீவில் டீசல் கட்டுப்பாடுதிலவுவதனால் இங்குள்ள குழாய்க் கிணறுகளிலிருந்து தண்ணீர் பெறுவதும் கஷ்டமாக இருப்பதாகவும் இதனால் குடி தண்ணீர்ப் பஞ்சமும் ஏற்பட்டுள்ளதாகவும் அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர். (78

### மரத்தில் இருந்து விழுந்து மரணம்

சீவல் தொழிலாளி ஒருவர் தவறுதலாக பனையால் விழுந்ததால் துடிதுடித்து பரிதாப நிலையில் அவ்விடத்திலேயே மரணமான சம்பவம் அல்வாயில் இடம்பெற்றது.

அல்வாய் குருக்கட்டுப் பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த குலசிங்கம் என்பவரே

### பரப்புக்கடந்தான் —

கடுகுழல், ஜே. ஆர். கைக்குண்டு - 6, தன்னியக்க கைக்குண்டு, ரி. என். ரி ரக குண்டு, எப். என். சி துப்பாக்கிகளுக்கான ரவைக் கூடு - 4, 5. 56 ரக ரவை - 820, இனிமினி விங் - 2757, 50 கலிபர் லிங் - 1076, 5 56 ரகரவை (கோர்வை) - 67. ஜி.பி எம் ஜி லிங் - 220. ஜி. பி. எம் ஜி (ரவைக் கோர்வை) - 500,

### காரைநகர்...

ரிக்கப்பட்டு வருவதாகவும் காரைநகரில் இருந்து இடம்பெயர்ந்தவர்களுக்கு தொடர்ந்தும் நிவாரணம் வழங்கப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது.

நேற்று வழக்கம்பரைச்சந்தியில் கட்டிடம் ஒன்றில் வைத்து நிவாரணம் வழங்கப்பட்டபோது வரிசையில் மக்கள் நின்றதையும் காண முடிந்தது ம-1 74

### ஆடிவை —

அங்குள்ள ஐயாயிரம் ரூபா பெறுமதியான பொருள்களும் இதனால் நாசமடைந்தன.

அல்வாய் வடக்கு சின்னத்

### இந்தியத்தூதரக...

வதற்கு.

முன்னர் 'ரைம்ஸ் ஒஃப் இந்தியா' பத்திரிகை நிருபர் அஷ்வாணி ரவவாரும் இந்திய வானொலி நிருபர் கருபசாமியும் பொலிஸாரால் மிரட்டப்பட்டதும் இவர்களது வீடுகள் சோதனையிடப்பட்டதும் கொலைப்பயமுறுத்தல்களும் விடுக்கப்பட்டதும்

## ஐ. தே. க. வேட்பாளர் பட்டியல்

இலேயே மரணமான சம்பவம் அல்வாயில் இடம்பெற்றது.

அல்வாய் குருக்கட்டும் பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த குலசிங்கம் என்பவரே மரணமானவர். இவருக்கு மூன்று பிள்ளைகளும் உள்ளனர். (38)

---

## யாழ்நகரில்...

கள் ஜனாதிபதி, கல்வியமைச்சர், கல்விச்சேவை ஆணைக்குழுத்தலைவர், பரீட்சை ஆணையாளர் ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இப்பரீட்சையை க. பொ. த. உயர்தர பரீட்சைக்குப் பின்னர் நடாத்துமாறும் கேட்கப்பட்டுள்ளது. (12)

---

## இணக்கமன்று...

தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதலுக்குள்ளான அம் அவர் மூர்ச்சையுற்று விழுந்த முதலில் மந்திகை ஆஸ்பத்திரிக்கும் பின்னர் அங்கிருந்து யாழ் பெரியாஸ்பத்திரிக்கும் கொண்டு செல்லப்பட்டார்.

தாக்குதலுக்குள்ளானஇவர் முன்னரும் இதே நபரினால் தாக்கப்பட்டுக் கால் முறிந்ததாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. 15)

---

லிங் - 2757, 50 கலிபர் லிங் - 1076, 5 56 ரவை (கோர்வை) - 67. ஜி.பி எம் ஜி லிங் - 220. ஜி. பி. எம் ஜி (ரவைக்கோர்வை) - 500, 30 கலிபர் ரவை லிங்குடன் - 20, 3 சுற்று வயர்கள், ரவைப்பெட்டிகள் - 10, பைனக்குலர் - 1 என்பன விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டன. 71

---

## திட்டமிட்டபடி...

யும் வடபிராந்திய கல்விப் பணிப்பாளர் ஆர். சுந்தரலிங்கம் வேண்டி நிறைவேற்றார்.

இதேவேளை பரீட்சை நடைபெறும் நிலையங்களுக்கு அருகில் எவ்வித தாக்குதல்களும் மேற்கொள்ளப்படமாட்டாது என இராணுவ வட்டாரங்கள் தெரிவித்ததாக அறிவிக்கப்படுகிறது.

வினாத்தாள்களை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் எடுத்துவருவதற்கு ஒத்துழைப்பை வழங்கியவர்களுக்கும் குறிப்பாக வேரதீவு இறங்கு துறையில் உதவி வழங்கிய இளைஞர்களுக்கும் கல்விப்பணிப்பாளர் நன்றி தெரிவித்தார். (70)

---

குடிசை—

அங்குள்ள ஐயாயிரம் ரூபா பெறுமதியான பொருள்களும் இதனால் நாசமடைந்தன.

அல்வாய் வடக்கு இன்னத்துரை கனகம்மா என்ற சந்தை வியாபாரியின் குடிசையே இவ்வாறு எரிந்து சாம்பரானது. (38)

---

## மாவிலங்கேணி...

விமானங்களும் அப்போது தாக்குதலை நடாத்தின.

இம்மோதலில் இராணுவ தரப்புசேதம் தெரியவரவில்லை புலிகள் தரப்பில் ஆசி 'மன்னார்' வீரமரணமடைந்தார். 71

---

## வவுனியாவில்...

லைப் புலிகளின் காவலரண் வந்து சேர்ந்தனர்

இவ்வாறு வந்த ஐந்து பொதுமக்கள் வே. ராணி 17 வவுனியா, ச. கௌரி 10 கிளிநொச்சி, ந. ஜெயமலர் 14 மன்னார், ந. பூமலர் 37 சாவகச்சேரி, ந கன்னிகா 33 வவுனியா எனத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டவர் விவரம் வருமாறு தங்கராஜா பவா 19 வவுனியா, சுப்பையா அமராவதி 39 வவுனியா, நடராஜா ஸ்ரீதரன் 28 ஊர்காவற்றுறை. 71, 74

---

மியும் பொலிஸாரால் மிரட்டப்பட்டதும் இவர்களது வீடுகள் சோதனையிடப்பட்டதும் கொலைப்பயமுறுத்தல்களும் விடுக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இவற்றைக் கண்டித்து கொழும்பிலுள்ள வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஜெனரல் சிறில ரணதுங்கவிடம் முறையிட்டிருந்தனர்.

இத்தகைய சம்பவங்கள் இனிதொடராது என ரணதுங்க உறுதியளித்திருந்த போதிலும் இம்முறை இந்திய தூதரக ஊழியர் மிரட்டப்பட்டது மட்டுமன்றி கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளமை இராஜதந்திர வட்டாரங்களில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

---

## கிழக்குப்பகுதி...

மாவட்டத்திற்கும் கிழக்கு மாகாணத்திற்கும் விமானம் மூலம் வினாத்தாள்கள் அனுப்பி வைக்கப்படும் எனவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டத்திற்கான வினாத்தாள்களை வடபிராந்திய கல்விப் பணிப்பாளரே கொழும்பிலிருந்து தரைமார்க்கமாக எடுத்துவந்தார். 70)

---

# ஐ. தே. க. வேட்பாளர் பட்டியல் சுதந்திரக்கட்சி ஆட்சேப மனு

அடுத்தமாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தலில் கட்டான, சீதுவை கட்டுநாயக்கா பகுதிகளில் போட்டியிடும் ஐக்கிய தேசிய கட்சி வேட்பாளர் பட்டியலில் ஒழுங்கீனம் இடம் பெற்றதாகவும் அவற்றை ரத்து செய்யுமாறும் கோரி மேல நீதிமன்றத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

இந்த வேட்பாளர்களின் நியமனப்பத்திரங்களில் கையொப்பமிட்ட சமாதான நீதவான்கள் பிரமாணவட்டங்களை ளை சேர்ந்தவர்கள் என அவர்கள் தமது மனுவில் குறிப்பிட்டுள்ளனர். 74

---

## மடு அகதி...

தாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மடு அகதி முகாமில் சீரான முறையில் உணவு விநியோகம் இடம்பெறுவதாக அகதிகளுக்கான ஐ. நா. உயர்ஸ்தானிகராலய வட்டாரங்கள் தெரிவித்தன.

இங்கு இடம்பெயர்ந்து வந்த குடும்பங்களை அகதிகளுக்கான ஐ. நா. உயர்ஸ்தானிகராலயம் பராமரித்து வருவதும் குறிப்பிடத்தக்கது. (74)

---

## விஜேதுங்க கனடா பயணம்

பிரதமரும் நிதியமைச்சரும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான டி. பி. விஜேதுங்க கனடா பயணமானார்.

இங்கு இம்மாதம் 25 ஆம் திகதி நடைபெறவுள்ள ஆசிய அபிவிருத்தி வங்கியின் 24வது ஆளுநர்கள் மாநாட்டில் அவர் கலந்துகொள்வார். 74

---

## தமிழ்—

அச்செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

இதேவேளை கடந்த சில மாதங்களில் பல தமிழ் இளைஞர்கள் போதைப்பொருளுடன் கைதாகி நீதிமன்றங்களில் ஆஜர் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் செய்திகள் தெரிவிக்கின்றன. 74

---

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவெட்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு 'டச்சு வீதி' லஷ்மிபில்டிங்'இல் உள்ள அச்சகத்தில் 22-04. 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.